## நிக்கவெரட்டிய பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 07 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 25 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிக்கவெரட்டிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 3,814,412 தொகையான 02 கணக்கு விடயங்களுக்காக விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வைப்புச் செய்யப்பட்ட திகதி, விபரம், பெறுமதியை உள்ளடக்கும் வகையில் காண்பிக்கின்ற விரிவான பட்டோலை தயாரிக்கப்பட வேண்டும். | சபையின் மூலம் வைப்புச்செய்யப்பட்ட நூலக வைப்பு, நானாவித வைப்பு மற்றும் இயந்திர உபகரண வைப்பு என காண்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக விதி) | | | |
| (i) விதி 32-42 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் 17 வீதிகளுக்குரிய 1175 ஆதனங்களில் இருந்து ரூபா 5,143,430 தொகையான ஆதன வரியை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைப் பணத்திற்குரிய கலப்குப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு அறவிடும் நிகழ்ச்சித் திட்டததிற்காக காலப்குப்பாய்வு தயாரித்து அறவிடும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டும். | விரைவாக நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) விதி 218 | சகல காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட வில்லை. | சகல காணி கட்டிடங்களையும் உள்ளடக்கும் வகையில் மெய்மையாய்வு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டு பதிவேடுகளில் இட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்காள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொளள்ப்பட்ட தற்பாலிக மதிப்பீட்டை செய்து பொதுக் கூட்டத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பபட்டு 02 வருட காலத்தை கடந்த ரூபா 1,437,821 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுகக்க வேண்டும். | இதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,408,658 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,653,263 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,010,062 | 6,860,062 | 4,372,827 | 4,772,157 | 3,483,000 | 3,778,000 | 3,612,000 | 2,184,000 |
| (ii) | வாடகை | 19,066,000 | 19,066,000 | 16,178,203 | 4,861,492 | 25,401,000 | 21,579,000 | 21,010,000 | 7,083,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,212,300 | 1,212,300 | 845,575 | 80,400 | 1,200,000 | 1,327,000 | 1,247,000 | 80000, |
| (iv) | ஏனைய வருமானம் | 74,394,914 | 74,394,914 | 68,761,436 | 26,616,340 | 76,361,000 | 64,052,000 | 58,615,000 | 28,628,000 |
| | மொத்தம் | 101,683,276 | 101,533,276 | 90,158,041 | 36,330,389 | 106,445,000 | 90,736,000 | 84,484,000 | 37,975,000 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,391,398 தொகையான ஆதன வரி தொகை அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடைசெய்து நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 15 நிரந்தர கடைகளிலிருந்து ரூபா 109,695 தொகையான மீதியும், 13 பழக்கடை கொட்டகைகளிலிருந்து ரூபா 56,075 தொகையான மீதியும் அறவிட வேண்டியிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானப் பரிசோதகர்களுக்கு அறிவித்து எதிர்காலத்தில் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பேரூந்து நிலைய கடைகளுக்காக 2016 சனவரி 25 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னரும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் சபைக்கு ரூபா 1,501,150 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிக்கவெரட்டிய பேரூந்து நிலைய கடைகளில் சில திறக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கடைகள் திறக்கப்படவில்லை. புறாக்கள் அசுத்தப்படுத்துவதனால் கடைகளை திறக்க முடியாதிருந்ததாகக் குறிப்பிட்டு வாடகையாளர்கள் நிலுவைப் பணத்தை செலுத்தாது புறக்கணித்திருந்தனர். இதனால் இந்தப் பிரச்சினைக்கு இது வரையிலும் தீர்வு காணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் விரைவாக அறவிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | பேரூந்து நிலைய கடைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் 18 கடைகளிலிருந்து ரூபா 840,828 தொகையான நிலுவை கடை வாடகை அறவிடவேண்டியிருந்தது. | தாமதக் கட்டணத்துடன் நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் 07 கடைகளில் இருந்து நிலுவைக் கடை வாடகையான ரூபா 315,250 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் / உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் எழு கடைகளில் இருந்து அறவிடுவதற்குள்ள நிலுவை கடை வாடகை ரூபா 315,250 தொகை 1987 இன் 15 அம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமுல்படுத்தி விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் பிரகாரம் பொது மக்களுக்காக செய்யவேண்டிய சேவைகளுக்காக சபையினால் உப விதிகள் விதிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் பின்பற்றப்பட்டிருந்தன. உள்ளூராட்சி நிறுவனத்தால் முச்சக்கர வண்டி நிறுத்தும் இடம் தொடர்பாக உப விதியொன்று தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சமர்ப்பித்து இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | சபையின் தேவையின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கும், விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை தயாரித்து விதித்துக்கொள்வதற்கு தேவையான விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, குறிகாட்டிகளை இனங்கண்டு இலக்கை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்தகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2016 ஏப்ரல் 11 அந் திகதி அரம்பிக்கப்பட்ட நிக்கவெரட்டிய பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் கீமணி முறையில் பெறப்பட்ட கேள்விதாரரின் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 929,000 தொகையான வருமானத்தை சபை இழந்திருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் கீமணி மற்றும் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் கீமணி முறையில் கேள்விதாரரினால் பெறப்பட்ட கடைகளின் மொத்த நிலுவைப் பணம் செலுத்தி முடிவுறுத்தாமையின் காரணமாக அந்தக் கடைகளின் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு முடியாதிருந்தது. எனினும் தற்போது அறவிடுவதற்குள்ள கடைகளின் வாடகை கடை திறக்கப்பட்ட திகதி முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தயவுடன் அறியத்தருகின்றோம். |
| (ஆ) | பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் கேள்வி கோரி வழங்கப்பட்ட வியாபார நடவடிக்கைகள் நடாத்திச்செல்லப்படுகின்ற கீழ் மாடியின் கடை | கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைப் பணத்தை அறவிட வேண்டும். | சுகாதார நிலையத்தில் இலக்கம் 26, 30, 31 மற்றும் மேல்மாடியின் 08 ஆம் இலக்க கடைகளில் மாதாந்த வாடகை மதிப்பீடு செய்து தருமாறு 2018.09.19 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 26, 30, 31 மற்றும் திறக்கப்படாத மேல்மாடியின் 08 ஆம் இலக்க கடை என்பவற்றிலிருந்து வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | அறிவிக்கப்பட்டதுடன் இது வரையிலும் மாதாந்த வாடகை எங்களுக்குக் கிடைக்காதிருந்தமையால் வாடகை அறவிடுவதற்கு முடியாமல் காணப்பட்டது. இந்த கடைகளில் மாதாந்த வாடகையை கூடிய விரைவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடைகளின் திறப்பு கையேற்கப்பட்ட திகதி முதல் வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதையும் அறியத்தருகின்றோம். |
| (இ) | பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் எந்த வாடகையும் சபைக்கு செலுத்தாத மூன்று வாடகையாளர்களினால் தமது கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | உப வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரிய வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகளை கேள்வி மூலம் பெற்ற கடை உரிமையாளர்களுக்கு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கடைகளுக்கு உரித்துக்கோர முடியாதிருந்தமை தொடர்பாக அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்படும். |
| (ஈ) | நிக்கவெரட்டிய பொதுச் சந்தையில் 35 நிரந்தர கடைகள், 06 தற்காலிக மரக்கறி கொட்டகைகள் மற்றும் 19 பழக் கொட்டகைகள் என்பவற்றின் மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு உரிய அறவிடல் செய்யப்பட வேண்டும். | கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் கடைகளில் மாதாந்த வாடகை அறவிடப்படுவதுடன் எந்தவொரு கோவையிலும் நிக்கவெரட்டிய பொதுச் சந்தை மதிப்பீட்டு அறிக்கை கண்டுபிடிக்கப்படவில்லை. |
| (உ) | 05 ஆம் இலக்க கடையிலிருந்து ரூபா 600,000 தொகையான கீமணி தொகை அறவிடவேண்டியிருந்தது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பேரூந்து நிலைய கீழ் மாடியின் இலக்கம் 05, 06 என்ற கடைகள் இரண்டும் ஒரு வாடகையாளரினால் கேள்வி மூலம் பெறப்பட்டிருந்தன. பணம் செலுத்துவதிலுள்ள பொருளாதாரக் கஸ்டத்தினைக் காண்பித்து சலுகைக் காலம் வழங்குமாறு செய்யப்பட்ட கோரிக்கையை கவனத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | | | கொண்டு பொதுக் கூட்டத்தின் மூலம் 2019 மே 31 வரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | பேருந்து நிலைய கடைகளை வாடகைக்குப் பெற்று பணம் செலுத்தாத 06 வாடகையாளர்கள், உடன்படிக்கை கைச்சாத்திடாத வாடகையாளர்கள் மற்றும் வாடகைப் பணம் செலுத்துகின்ற 03 வாடிக்கையாளர்கள் வாடகை உடன்படிக்கைக்கு முரணாக தமது கடைகளை உப வாடகைக்கு வழங்கியிருந்த போதும் சபை இது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியிருந்ததுடன் காலரீதியில் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கையின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகை ஆதனங்களை உப வாடகைக்கு வழங்க முடியாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக வாடகையளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம். |
| (எ) | நிக்கவெரட்டிய பொது வசதிகள் நிலையத்தில் கடைகள் கீ மணி முறைமையில் வழங்கப்பட்டிருக்கும் போது 08 கடைகளில் இருந்து ரூபா 2,224,000 தொகையான கீ மணி தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்டது. மேலும் கீ மணி செலுத்தாத சில கடைகளில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார நிலையத்தில் இது வரையில் ரூபா 546,750 தொகையான கீ மணி நிலுவை மீதியாகக் காணப்பட்டது. இந்த நிலுவைப் பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

3.3 பெறுகை

3.3.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | வுழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

3.3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,699,201 தொகை செலவில் பூர்த்தி செய்யப்பட்ட கிரியுள்ள நேபடவ வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் போது உரிய பரிந்துரையின் அடிப்படையில் ரூபா 169,920 தொகையான நிறுத்திவைத்தல் பணத்தை மீளச் செலுத்துதல் சபை செயலாளரினாலும் தலைவரினாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் பரீட்சித்த போது வீதியின் ஆரம்பம் முதல் 20 மீற்றர் வரையான பகுதி வெடித்துக் கழன்று பல குழிகள் ஏற்பட்டிருந்தன. | நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் வீதியில் கணிசமான குறைபாடுகள் காணப்படுகின்றமையால் அவற்றை சரிசெய்து கொள்ளல் வேண்டும். | இது வரையில் வேலை அத்தியட்சகருடன் வீதியைப் பரீட்சித்து வேலையை மேற்பார்வை செய்து தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மதிப்பீடு தயாரித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |